**தன்னாட்சி**
***(உள்ளாட்சி உங்களாட்சி)***
**பதிவு எண்: 272/2018**
69, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600001.
மின்னஞ்சல் : thannatchi@gmail.com

**M. ஜாகிர் ஹுசைன்**
தலைவர்
9884017119

**இரா. வினோத் குமார்**
பொதுச் செயலாளர்
7200297276

**28.04.2023**

**கண்ணியமற்ற முறையில் செயல்படும்**

**மதுரை மேலூர் வட்டாட்சியர் அலுவலகம்**

**தன்னாட்சி கண்டன அறிக்கை!**

மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தைச் சார்ந்த கம்பூர் என்ற ஊராட்சியில் இளைஞர்கள் பலர் கிராமசபைக்காகவும் தனது ஊர் முன்னேற்றத்திற்காகவும் தொடர்ந்து பல வருடங்களாக இயங்கி வருகின்றனர். தமிழ்நாடு அளவில் ஒரு முன்மாதிரியாக தங்கள் ஊர் கிராமசபையை வலுப்படுத்திய அவர்களின் செயல்பாட்டை ராஜீவ் காந்தி பவுண்டேஷன் என்ற நிறுவனம் ஆவணப்படுத்தியுள்ளது. மேலும் அவர்களது தொடர் மக்கள் சார்ந்த செயல்பாடு காரணமாக, ஆனந்த விகடன் சமீபத்தில் அவர்களுக்கு 2022க்கான ‘டாப் 10 இளைஞர்கள்’ விருது வழங்கி சிறப்பித்துள்ளது.

இந்நிலையில், இவ்விளைஞர்கள் கம்பூர் ஊராட்சி கோவில்பட்டியைச் சார்ந்த மக்களுக்கான குடியிருப்பு பட்டா பெறுவதற்காக 18.04.2023 அன்று மேலூர் வட்டாட்சியர் அலுவலகம் சென்றிருந்த நிலையில், தங்கள் ஊரைச் சார்ந்த மணிவண்ணன் என்பவரின் வேண்டுகோளின் படி, அவர் கடந்த 2022 ஆம் வருடம் ஜூன் மாதத்தில் விண்ணப்பித்திருந்த தனது மகள் சுகாசினி அவர்களின் பெயரைப் பிறப்புச் சான்றிதழில் சேர்ப்பது தொடர்பாக மூத்த வருவாய் ஆய்வாளர் திரு பிரபாகரன் அவர்களை அணுகியிருக்கின்றனர். அதற்கு அவர் ஏற்கனவே தயாராகி விட்ட அச்சான்றிதழைத் தராமல் "பிறகு வாருங்கள்! சிறிது நேரம் கழித்து வாருங்கள்! மாலை வாருங்கள்!" என்று அலைக்கழித்துள்ளதாகத் தெரிகிறது.

"ஏற்கனவே தயாராகி இருக்கும் சான்றிதழை 9 மாதங்களுக்கு மேலாக அலைக்கழித்த நிலையில் மேலும் ஏன் இவ்வாறு அலைக்கழிக்கிறீர்கள்?" என்று கேட்டதற்கு வருவாய் ஆய்வாளர் அவர்கள் விண்ணப்பதாரர் முதற்கொண்டு கம்பூரைச் சார்ந்த அந்த இளைஞர்களை ஒருமையிலும் தகாத வார்த்தைகள் பேசியும் அவமதித்ததுடன், பிற அலுவலர்களுடன் சேர்ந்து அந்த இளைஞர்களின் சட்டையைப் பிடித்து வெளியில் தள்ளியுள்ளார். மேலும் மது அருந்திவிட்டு அரசு பணி செய்ய விடாமல் இடையூறு செய்துள்ளனர் என்றும், கொலை மிரட்டல்

விடுத்துள்ளனர் என்றும் அரசு மதுபான கடைக்கு எதிராகவும் ஊழலுக்கு எதிராகவும் தொடர்ந்து போராடிவரும் அந்த இளைஞர்கள் மீது u/s IPC 147, 294(b), 353, 506(i) போன்ற பிரிவுகளில் பொய்யாக வழக்கும் (Cr.No 239/2023, PS: Melur) பதிவு செய்துள்ளனர். மேலூர் வட்டாட்சியர் அலுவலக அலுவலர்களின் இச்செயலை தன்னாட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

தொடர்ந்து மக்கள் பணி செய்து வரும் இளம் செயற்பாட்டாளர்களுக்கே இந்த நிலைமை எனில், எளிய விளிம்பு நிலை மக்கள் அந்த அலுவலகத்தில் எவ்வாறு நடத்தப்படுவார்கள் என்பதை நினைக்கும் போது கவலை எழுகிறது. அரசு அலுவலர்களின் இந்த அதிகார மீறல் அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது. வருவாய் துறை என்பது எளிய மக்கள் தங்கள் அடிப்படை தேவைக்காக அதிகமாகப் புழங்கும் ஒரு அலுவலகம் ஆகும். அங்கு மக்கள் கண்ணியமுடன் நடத்தப்பட வேண்டும் என்பது அடிப்படை மனித உரிமை ஆகும். ஆனால் தமிழ்நாட்டில் வருவாய்த்துறை உள்ளிட்ட பிற அரசு அலுவலகங்களிலும் இந்த அடிப்படை மனித உரிமை தொடர்ந்து மீறப்படுவது வேதனைக்குரிய ஒன்றாக உள்ளது. அதற்கு இந்த நிகழ்வு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது.

எனவே,

1. கம்பூர் இளைஞர்கள் மீது போடப்பட்ட பொய் வழக்கை அரசு உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.
2. கண்ணியமற்ற முறையில் நடந்து கொண்ட வருவாய் ஆய்வாளர் திரு.பிரபாகரன் மற்றும் பிற அலுவர்களின் செயல்பாடு குறித்து விரிவான விசாரணை நடத்தி, அவர்கள் மீது, அரசு சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
3. மதுரை மேலூர் வட்டாட்சியர் அலுவலகம் இனி மக்களுக்கான அலுவலகமாகச் செயல்படுவதை மாவட்ட நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும்.
4. அரசு அலுவலர்கள் மக்களை கண்ணியமுடன் நடத்துவதை உறுதி செய்யவதற்கான அனைத்து முயற்சிகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டும்.

என்று தன்னாட்சி கோருகிறது.




(M. ஜாகிர் ஹுசைன்)
தலைவர்

(இரா. வினோத் குமார்)
பொதுச் செயலாளர்